මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: DMS/CIR/Allowances/2024
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2025.10. 16

முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை: 10/2025

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்

**அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பிற செயற்பாடுகளை நடத்தும் வளவாளர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குதல்**

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பிற நடவடிக்கைகளுக்கு வளவாளர்களாக பங்குபற்றும் அலுவலர்களுக்கு பொதுவானதொரு வழிமுறையின்படி கொடுப்பனவுகளை வழங்கும் நோக்கத்துடன் 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்திற்கமைவாக இந்த சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்கள் 2025.10.01 முதல் அமுலுக்கு வருகின்றன.

02. அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் முறையான அங்கீகாரம் பெற்று நடத்தப்படும் மேற்கண்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வளவாளர்களாகச் செயற்படும் நிபுணத்துவ அறிவுள்ள அரச நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் தனியார் துறை வளவாளர்களுக்கான கொடுப்பனவுகள் பின்வருமாறு வழங்கப்படல் வேண்டும்.

| வகை | வளவாளர்கள் | மணித்தியாலத்திற்கு அனுமதித்த கொடுப்னவு |
|---|---|---|
| வகை I | I. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் சிரேட்ட பேராசிரியர் / பேராசிரியர்கள். | ரூபா 2,400/- |
| | II. இலங்கை நிர்வாக சேவை மற்றும் அதற்கிணையான நாடளாவிய சேவைகள் / திணைக்களப் பதவிகளில் விஷேட தர அலுவலர்கள். | |
| | III. அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் HM 2-3, HM 2-2 மற்றும் HM 2-1 சம்பள வகுதியைச் சேர்ந்த சிரேட்ட மட்ட முகாமைத்துவ அலுவலர்கள். | |
| | IV. குறித்த துறையில் நிபுணத்துவம் பெற்ற தனியார் துறை விரிவுரையாளர்கள். (குறித்த துறையில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் நீண்ட கால அனுபவத்துடன்.) | ரூபா 2,250/- |

| | | |
|---|---|---|
| வகை II | I. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சிரேட்ட விரிவுரையாளர்கள். | ரூபா 2,000/- |
| | II. இலங்கை நிர்வாக சேவை மற்றும் அதனுடன் இணையான நாடளாவிய சேவைகள் / இணைந்த சேவைகள் / திணைக்களம் சார் பதவிகளில் நிறைவேற்றுத்தர சேவை வகுதியில் தரம் I அலுவலர்கள். | |
| | III. அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் HM 3-1, HM 2-1, HM 1-1சம்பள வகுதியைச் சேர்ந்த சிரேட்ட மட்ட முகாமைத்துவ அலுவலர்கள் மற்றும் AR 2 சம்பள அளவுத்திட்ட வகையினைச் சாரந்த சிரேட்ட கல்வி மற்றும் ஆராய்ச்சி அலுவலர்கள். | |
| | IV. குறித்தத் துறையில் 10 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட தொடர்ச்சியான அனுபவமுள்ள தனியார் துறை விரிவுரையாளர்கள் (SLQF நிலை 10 - முதுமாணிப் பட்டம், NVQ நிலை 7 - பட்டப் படிப்பு) | |
| வகை III | I. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்கள். | ரூபா 1,800/- |
| | II. இலங்கை நிர்வாக சேவை மற்றும் அதனுடன் இணையான நாடளாவிய சேவைகள் / இணைந்த சேவைகள் / திணைக்களம் சார் பதவிகளில் நிறைவேற்றுத்தர சேவை வகுதியில் தரம் II அலுவலர்கள். | |
| | III. அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் MM 1-3, MM 1-2 மற்றும் MM 1-1 சம்பள வகுதியைச் சேர்ந்த நடுத்தர முகாமைத்துவ அலுவலர்கள் மற்றும் AR 1 சம்பள அளவுத்திட்ட வகையினைச் சார்ந்த சிரேட்ட கல்வி மற்றும் ஆராய்ச்சி தரம் I அலுவலர்கள். | |
| வகை IV | I. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் தகுதிகாண் விரிவுரையாளர்கள். | ரூபா 1,600/- |
| | II. இலங்கை நிர்வாக சேவை மற்றும் அதனுடன் இணையான நாடளாவிய சேவைகள் / இணைந்த சேவைகள் / திணைக்களம் சார் பதவிகளில் நிறைவேற்றுத்தர சேவை வகுதியில் தரம் III அலுவலர்கள். | |
| | III. அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் MM 1-3, MM 1-2 மற்றும் MM 1-1 சம்பள வகுதியைச் சேர்ந்த நடுத்தர முகாமைத்துவ அலுவலர்கள் மற்றும் AR 1 சம்பள அளவுத்திட்ட வகையினைச் சார்ந்த சிரேட்ட கல்வி மற்றும் ஆராய்ச்சி தரம் II அலுவலர்கள். | |
| வகை V | I. மேற்கண்ட வகையினைச் சாராத ஆனால் தொடர்புடைய துறையில் தகுதியும் நிபுணத்துவமும் அனுபவமும் உள்ளவர்கள். | ரூபா 1,500/- |
| | II. இலங்கை அதிபர் சேவையின் தரம் I/II/III அலுவலர்கள். | ரூபா 1,400/- |
| | III. ஆசிரியர் ஆலோசகர்கள். | |
| | IV. இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் I அலுவலர்கள். | |
| | V. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரிகள். | |
| | VI. கனிஷ்ட மட்டத்தில் JM 1-2, JM 1-1 சம்பள வகுதியைச் சார்ந்த அலுவலர்கள். | |

03. மேலே உள்ள அட்டவணையில், **"அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்"** என்பது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாகும்.

04. மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு பின்வரும் நிபந்தனைகள் பொருந்தும்.

**நிபந்தனைகள்**

I. இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பிற இதனைப் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களில் பயிற்சிகளை வழங்கும் வளவாளர்களுக்குப் பொருந்துவதுடன், இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் கற்பித்தல் மற்றும் பயிற்சிகள் நடத்துவதை முக்கிய பணியாகக் கொண்ட ஒரு நிறுவனத்தால் நடத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படக்கூடாது.

II. வளவாளர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 03 மணிநேரம் வரை கொடுப்பனவுகள் வழங்கப்படும். மேலும், விரிவுரையில் சேர்க்கப்பட்டுள்ள குழுப்பணி மற்றும் நடைமுறை நடவடிக்கைகள் காரணமாக மேற்கண்ட காலத்திற்குள் தொடர்புடைய விரிவுரையை முடிப்பது நடைமுறைக்கு சாத்தியமில்லை ஆயின், 03 மணிநேரத்திற்கு அப்பாலும் அதிகபட்சமாக 06 மணிநேரம் வரை கொடுப்பனவுகள் வழங்கப்படலாம். எனினும், நிறுவனத் தலைவர் தொடர்புடைய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும், விரிவுரை தொடர்புடைய காலத்திற்குள் முடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் தனிப்பட்ட முறையில் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ள வேண்டும்.

III. உள்ளக அலுவலர்கள் வளவாளர்களாகப் பணியில் ஈடுபடும்போது, குறித்த பணி அவர்களின் வழக்கமான கடமைகளுக்கு வெளியே இருத்தல்வேண்டும் என்பதுடன், வழக்கமான வேலை நேரத்திற்கு புறம்பாக அப் பணியில் ஈடுபட்டிருந்தால் மட்டுமே மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்படல் வேண்டும்.

IV. ஒரு நிறுவனம் தனது அலுவலர்களுக்கு சாதாரண வேலை நேரத்தில் ஏதேனும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தினால், வளவாளராக பற்குபற்றும் அந்நிறுவனத்தின் அலுவலர்களுக்கு (உள்ளக வளவாளர்களுக்கு) வளவாளர் கொடுப்பனவுகளை வழங்கக்கூடாது. மேலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சாதாரண வேலை நேரத்திற்கு புறம்பாக அல்லது தொடர்புடைய நிறுவனத்தைச் சேர்ந்த அலுவலரல்லாதவர்களுக்கு நடத்தப்பட்டால், அந்நிறுவனத்தின் அலுவலருக்கும் வளவாளர் கொடுப்பனவுகள் வழங்கப்படலாம்.

V. அதேபோன்று, வளவாளர்களாக அலுவலர்களை ஈடுபடுத்தும் போது, சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரின் அனுமதியுடன், அவ்வாறு பயிற்சி வழங்கும் அலுவலர்களின் வழக்கமான கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அவர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

VI. மேற்கண்ட பணிகளுக்கு வேறு எந்த மேலதிகக் கொடுப்பனவும் வழங்கப்படக்கூடாது.

05. வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் பிற இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்தும்போது, பங்குபற்றுநர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்பட்டால், குறித்த அலுவலர்களுக்கு கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படக்கூடாது. மேலும் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படாவிட்டால் மட்டுமே, தற்போதுள்ள ஏற்பாடுகளின்படி பயணச் செலவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

06. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் இதுபோன்ற பிற நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும், அதற்குப் பொருத்தமான விரிவுரையாளர்களைப் பணியமர்த்துவதற்கும் நிறுவனத் தலைவரிடமிருந்து அல்லது தொடர்புடைய தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து தேவையான அங்கீகாரத்தினைப் பெறுவதுடன், அரசாங்கத்திற்குப் பயனுள்ள வகையில் மேற்கூறிய செயற்பாடுகளை நடத்துவதும் நிறுவனத் தலைவரின் பொறுப்பாகும்.

07. வளவாளர் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு தற்போது வழங்கப்பட்டுள்ள அனுமதிகள் 2025.10.31 வரை மட்டுமே செல்லுபடியாகும் என்பதுடன், 2025.11.01 ஆந் திகதி முதல் இந்த சுற்றறிக்கையின் விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

08. இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் அல்லது வேறு ஏதேனும் விடயங்கள் குறித்து தெளிவு / விசாரணை ஏதேனும் தேவைப்படின், தயவுசெய்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினைத் தொடர்பு கொள்ளவும் 011 – 2484757.

**ஒப்பம்/-**
**கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும**
திறைசேரி மற்றும் நிதி, திட்டமிடல்
மற்றும் பொருளாதார அபிவிருத்தி
அமைச்சின் செயலாளர்

பிரதி :

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்